வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 1.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

**செயற்கை நுண்ணறிவு** என்பது, நேர்மறை மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பே தவிர, வெறும் தொழில் நுட்பம் அல்ல என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான, பிரதமரின் **மாத்ரு வந்தனா திட்டம்** அமலுக்கு வந்து, இன்றுடன் 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

படுக்கை வசதியுடன் கூடிய நாட்டின் **முதலாவது வந்தேபாரத்** ரயில், குவஹாத்தி-கொல்கத்தா இடையே, விரைவில் தொடக்கப்பட உள்ளது.

**இன்று ஆங்கிலப் புத்தாண்டு தினம்** புதுச்சேரியில், வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

*முர்மு*

இளைஞர்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், செயற்கை நுண்ணறிவு என்பது, நேர்மறை மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பே தவிர, வெறும் தொழில் நுட்பம் அல்ல என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான எதிர்காலத்திற்கு பள்ளி மாணவர்களைத் தயார்படுத்துவதற்கான, SOAR-Skilling திட்டத்தின் கீழ், புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பயிற்சி

முடித்த மாணவர்கள் மற்றும் பிறருக்கு, சான்றிதழ்களை வழங்கி, அவர் உரையாற்றினார். எல்லாத் துறைகளிலும் செயற்கை நுண்ணறிவின் முக்கியத் துவம் அதிகரித்து வருவதால், அனைவரும் ஏஐ தொழில் நுட்பம் கற்றுக் கொள்வது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். விழாவின் போது ஏஐ பயிற்சி முடித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. **சுயசார்பை எட்டுவதற்கான ஏஐ விழிப்புணர்வு** குறித்து, தேசிய அளவிலான பிரச்சார இயக்கம் ஒன்றையும் குடியரசு தலைவர் தொடக்கி வைத்தார்.

*ஜிஎஸ்டி*

கடந்த டிசம்பர் மாதத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. 2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இது 6.1 சதவிகிதம் அதிகமாகும். கடந்த மாதத்தின் மொத்த ஜிஎஸ்டி வசூலில், சி-ஜிஎஸ்டி வசூல், 34 ஆயிரத்து 289 கோடி ரூபாயாகவும், எஸ்-ஜிஎஸ்டி வசூல், 41 ஆயிரத்து 368 கோடி ரூபாயாகவும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி வசூல், 98 ஆயிரத்து 894 கோடி ரூபாயாகவும், பதிவாகி உள்ளது.

*யுபிஐ*

இந்தியாவின் **யுபிஐ பணப் பறிமாற்ற வசதி** மூலம், கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும், 21.63 பில்லியன் பணப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வருடாந்திர அடிப்படையில் இது, 29 சதவிகித வளர்ச்சியாகும் என, **தேசிய பணப்பட்டுவாடாக் கழகம்** தெரிவித்துள்ளது. யுபிஐ மூலமான பணப் பரிவர்த்தனைகளின் மொத்த மதிப்பும், கடந்த டிசம்பரில் 28 லட்சம் கோடி ரூபாயாக, 20 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளது.

*மாத்ரு வந்தனா*

கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, சுகாதார மற்றும் ஊட்டச்சத்து உதவிகளை வழங்குவதற்கான பிரதமரின் **மாத்ரு வந்தனா திட்டம்** அமலுக்கு வந்து, இன்றுடன் 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்............

(வாய்ஸ்)

பிரதமரின் **மாத்ரு வந்தனா திட்டத்தின் கீழ்,** சமூகப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த, கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, முதல் குழந்தையாக இருந்தால் 5 ஆயிரம் ரூபாயும், 2-ஆவது பெண் குழந்தைக்கு 6 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. பெயர்ப் பதிவு செய்த உடன், 3 ஆயிரம் ரூபாய் **முதல் தவணையாகவும்,** எஞ்சிய தொகை, குழந்தை பிறந்த பின்னர், **2-ஆவது தவணையாகவும்** வழங்கப்படுகிறது. தகுதி உள்ள பயனாளிகள், **ஜனனி சுரக்க்ஷா யோஜனா** திட்டத்தின் அடிப்படையில், ஊக்கத் தொகையும் பெறுகிறார்கள். முற்றிலும் மத்திய அரசின் நிதி மூலமான இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 4 கோடியே 50 லட்சம் பயனாளிகள் பதிவு பெற்றுள்ளதாகவும், சுமார் 19 ஆயிரம் கோடி ரூபாய் உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், மத்திய **மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம்** தெரிவித்துள்ளது.

*தொழிலாளர் சட்டம்*

நாட்டில் கடந்த நவம்பர் முதல் அமலுக்கு வந்த 4 புதிய தொழிலாளர் சட்டங்களின் கீழ், புதிய **வரைவு விதிமுறைகளை** மத்திய அரசு வெளியிட்டு, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர் மற்றும் பொது மக்களின் கருத்துக்களை நாடி உள்ளது. வரைவு விதிமுறைகள் பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை, 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*ஊக்கத் திட்டம்*

**மோட்டார் வாகன உற்பத்தி துறைக்கான, உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டம்,** இதுவரை, மொத்தம் 35 ஆயிரத்து 657 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து இருப்பதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது. மோட்டார் வாகன உற்பத்தி துறையில் நவீன உற்பத்தி வசதிகளை பெருக்கும் நோக்கிலான இத்திட்டத்தின் கீழ் இதுவரை, சுமார் 10 லட்சம் மின்சார இருசக்கர **வாகனங்கள்,** 2.38 லட்சம் மின்சார 3 சக்கர

வாகனங்கள், 80 ஆயிரம் மின்சார 4 சக்கர வாகனங்கள், மற்றும், சுமார் ஆயிரத்து 400 மின்சாரப் பேருந்துகளுக்கு, ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மத்திய கனரக தொழில் துறை அமைச்சகம், இன்று, இத்தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஓய்வூதியம்

என்பிஎஸ் என்னும் தேசிய பென்சன் முறையை நிர்வகிப்பதற்கான பென்சன் நிதியங்களை, ஷெட்யூல்டு வர்த்தக வங்கிகளும் அமைத்துக் கொள்ளலாம் என, பென்சன் நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் தேசிய பென்சன் முறையில் வங்கித் துறையின் பங்கேற்பை அதிகரிக்கவும், பென்சன் நிதி நிர்வாகத்தில் வங்கிகளுக்கு இடையிலான போட்டிகளை மேம்படுத்தவும், என்பிஎஸ் சந்தா தாரர்களின் நலன்களை உறுதிப்படுத்தவும் ஏதுவாகும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பென்சன் நிதி ஒழுங்குமுறை ஆணையம், என்பிஎஸ் அறக்கட்டளைக்கு, பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவர் திரு தினேஷ்குமார் காரா உட்பட 3 புதிய அறங் காவலர்களையும் நியமித்துள்ளது.

வந்தேபாரத்

படுக்கை வசதியுடன் கூடிய நாட்டின் முதலாவது வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயில், குவஹாத்தி-கொல்கத்தா இடையே விரைவில் செயல்படத் தொடங்கும் என, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார். முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்டு, உயர்வேக வெள்ளோட்டம் முடிக்கப்பட்டுள்ள இந்த ரயிலை, அடுத்த 15 அல்லது 20 நாட்களில், பிரதமர் திரு நரேந்திர மோடி தொடக்கி வைப்பார் என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். படுக்கை வசதியுடன் கூடிய 16 பெட்டிகள் இந்த ரயிலில் இடம் பெறும் என்றும், நீண்ட தூர பயணத்திற்கான பல்வேறு நவீன வசதிகள் இதில் பயணிகளுக்கு கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

புத்தாண்டு-புதுச்சேரி

இன்று ஆங்கிலப் புத்தாண்டு தினம் புதுச்சேரியில், வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கோவில்களில் இன்று அதிகாலை முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. புகழ்பெற்ற மணக்குள விநாயகர் கோவிலில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். கிறிஸ்துவ தேவாலயங்களில் நேற்று நள்ளிரவு முதல் இன்று காலையிலும் சிறப்பு பிராத்தனைகள் நடைபெற்றன. புத்தாண்டை கொண்டாட அண்டை மாநிலங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் புதுச்சேரியில் குவிந்ததால், போலீசார் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

ஆண்டு இறுதி-விளையாட்டு

நேற்றுடன் முடிவடைந்த 2025-ஆம் ஆண்டு, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய அத்தியாயமாக அமைந்தது. அரசின் சீர்திருத்தக் கொள்கைகள், முன்னேற்றமாகவும் முக்கிய தாக்கங்களாகவும் மாறியதை 2025-ஆம் ஆண்டில் நாம் கண்டோம். இன்று, **சீர்திருத்தங்களின் ஆண்டு** என்னும் இந்த சிறப்பு தொடரில், கடந்த ஆண்டு விளையாட்டுத் துறையில் இந்தியா எட்டி சாதனைகள் குறித்து, ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

2025-ஆம் ஆண்டு இந்தியாவின் விளையாட்டுத் துறையில் முக்கிய சீர்திருத்தங்கள் எட்டப்பட்டன. இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்திற்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகள், 3 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டதும், தேசிய அளவில் புதிய விளையாட்டுக் கொள்கை அமலுக்கு வந்ததும், தேசிய விளையாட்டு மேலாண்மை சட்டம் நிறைவேற்றப்பட்டதும், விளையாட்டுத் துறையில் ஆண்டின் முக்கிய அம்சங்களாக அமைந்தன. 2025-ஆம் ஆண்டில் ஸ்குவாஷ் விளையாட்டில் இந்தியா, முதல் முறையாக உலக கோப்பையை வென்றது. ஐசிசி மகளிர் உலக கோப்பை கிரிக்கெட்

போட்டியிலும் பார்வை திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான உலக 20 ஓவர் கிரிக்கெட் போட்டியிலும் இந்தியா, வெற்றி பெற்றது. இந்திய ஆடவர் கிரிக்கெட் அணி ஐசிசி சேம்பியன் தொடரில் கோப்பை வென்றது. உலக குத்துச் சண்டை இறுதிப் போட்டிகளில் இந்திய அணியினர் 9 தங்கப் பதக்கங்களையும், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில், மொத்தம் 49 பதக்கங்களையும் வென்று சாதனை படைத்தனர். கோ-கோ உலக கோப்பை போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றது. நீரஜ் சோப்ரா, ஷீத்தல் தேவி , சீராக் ஷெட்டி, ராங்கி ரெட்டி, திவ்யா தேஷ்முக் போன்ற இந்திய வீரர்-வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளில் தங்களின் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி நாட்டிற்கு பெருமை சேர்த்தனர். 2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாத்தில் நடத்தும் உரிமையை, இந்தியா கோரிப் பெற்றுள்ளதால், கிராமம்- நகரம் போன்ற எந்த பின்னணியில் இருந்து வந்தாலும் விளையாட்டுத் துறையில் திறமை உள்ளவர்களுக்கு வாய்ப்புக்கள் கொட்டிக் கிடப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறித்தி வரும் கருத்து, மீண்டும் நிரூபணமாகி உள்ளது.

*நாராயணசாமி*

போலி மருந்து விவகாரத்தில் சிபிஐ விசாரணைகள் துரிதமாக நடைபெறவில்லை என்றால் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் மேற்பார்வையில் விசாரணைகளை நடத்த நீதிமன்றத்திடம் நேரில் வலியுறுத்தப்படும் என புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் திரு வி நாராயணசாமி கூறி உள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆளும் என்ஆர் காங்கிரஸ் மற்றும் பாஜக-வினரைக் காப்பாற்றவே சிபிஐ விசாரணை ஆமை வேகத்தில் நடப்பதாக குற்றம் சாட்டினார். பாரதியார் கிராம வங்கியின் பெயரில் இருந்து நீக்கப்பட்ட பாரதியார் பெயரை மீண்டும் சேர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார்.

*வானிலை*

இன்று தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி, நெல்லை, குமரி, தூத்துக்குடி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களுக்கு அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை பெரம்பூர் மண்டலத்தில் 11 செமீட்டர் மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*எல் பி ஜி*

சென்னை உள்ளிட்ட பெரு நகரங்களில் வர்த்தக பயன்பாட்டிற்கான எல் பி ஜி சிலிண்டர் விலை, 111 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சென்னையில் இன்று முதல், 19 கிலோ வர்த்தக எல் பி ஜி சிலிண்டர் விலை, ஆயிரத்து 739 ரூபாய், 50 பைசாவாக அதிகரித்துள்ளது. வீட்டு உபயோகத்திற்கான எல் பி ஜி சிலிண்டர் விலையில் மாற்றம் இல்லை.

*ராஜ்நாத்*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில் உள்ள பங்களாதேஷ் தூதரகத்திற்கு நேரில் சென்று முன்னாள் பங்களாதேஷ் பிரதமர் பேகம் கலிதா ஜியாவின் மறைவு குறித்த இரங்கல் புத்தகத்தில் கையெழுத்திட்டார். கலதா ஜியா குடும்பத்தினர் மற்றும் பங்களாதேஷ் மக்களின் துயரத்தை இந்தியா பகிர்ந்து கொள்வதாக அவர் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

**செயற்கை நுண்ணறிவு** என்பது, நேர்மறை மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பே தவிர, வெறும் தொழில் நுட்பம் அல்ல என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான, பிரதமரின் **மாத்ரு வந்தனா திட்டம்** அமலுக்கு வந்து, இன்றுடன் 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

படுக்கை வசதியுடன் கூடிய நாட்டின் **முதலாவது வந்தேபாரத் ரயில்,** குவஹாத்தி-கொல்கத்தா இடையே, விரைவில் தொடக்கப்பட உள்ளது.

**இன்று ஆங்கிலப் புத்தாண்டு தினம்** புதுச்சேரியில், வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/1.1.2026/Script.

---------------------------